## அரியலூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர் திரு.இரா.ஜெய்னுலாப்தீன். எம்.எஸ்.சி.

ந.க.எண்.அ3/7803/2018 நாள். 24.12.2021

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் – அரியலூர் மாவட்ட வருவாய் அலகு – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்ட கவிப்பிரியா(திருமதி).மோ என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை:
1. அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். அ3/6803/2018 நாள். 04.02.2019
2. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள். 26.02.2021
3. சென்னை, கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண். ஆ.கு.3/18395/2020 நாள். 03.11.2021

********

**ஆணை**

அரியலூர் மாவட்ட வருவாய் அலகில், கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி பணியிடையே 05.08.2018 அன்று இறந்துபோன (லேட்) திரு.கலைக்கோவன் என்பவரது மனைவி திருமதி.மோ.கவிப்பிரியா என்பவருக்கு பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின் படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 22.02.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வை –2ல் காணும் அரசாணை மற்றும் பார்வை–3ல் காணும் கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் "02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வும் தேவைப்படாத பணியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட பணிநியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு தொடர்புடைய அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.